பக்கங்கள் 19+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 16 செவ்வாய்க்கிழமை 29.04.2025 | அதிர்வு 269

## தென்னிலங்கையில் ஒருவர் சுட்டுக்கொலை

(எஸ்.ஜினோதன்)



பாணந்துறையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொரு

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# அநுர அரசாங்கமும் அரசியல் தலையீடு!

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

“அரசியல் தலையீடற்ற ஆட்சியை ஏற்படுத்துவோம் என ஆட்சி அதிகாரத்தை எடுத்துக்கொண்ட அநுர அரசும் கடந்த கால ஆட்சியாளர்கள் போன்றே அரசியல் தலையீடுகளைச் செய்கின்றது.”

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

02

## பஸ்கள் விபத்து! 30 பேர் காயம்!!



பெலியத்த, ஹெட்டியாராச்சி பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

திக்வெல்லவிலிருந்து பெலியத்த நோக்கிச் சென்ற தனியார் பஸ், எதிர்த் திசையில் பயணித்த இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த பயணிகள் தங்காலை மற்றும் பெலியத்த வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பெலியத்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## ஜனாதிபதி அநுர மே 3 ஆம் திகதி வியட்நாம் பயணம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் மே 3 ஆம் திகதி வியட்நாமுக்குப் பயணம் மேற் கொள்ளவுள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான

02

## இன்று சட்டத்தின் ஆட்சி இல்லை

### எதிர்க்கட்சித் தலைவர் கடும் விசனம்

“இன்று நாட்டில் சட்டத்தின் ஆட்சி இல்லை. அதனைப் பேணுவதற்கான ஏற்பாடுகளும் இல்லை. பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கை சமூகத்தை ஆக்கிரமித்துள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்கு அநுர அரசிடம் தீர்வு இல்லை.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் தற்போது மூன்றாவது தேர்தலை நாம் எதிர்கொண்டுள்ளோம். இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் விருப்பு வாக்கு



களைப் பதிவிடுவது தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர், கடந்த இரண்டு தேர்தல்களிலும் அரசு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனங்களில் எதனைத் தெளிவாக நடை

02

# யாழில் மின்னல் அனர்த்தம் காரணமாக 19 பேர் பாதிப்பு

## நான்கு வீடுகள் சேதம்

யாழ்ப்பாணத்தில் கடந்த இரு தினங்களாக ஏற்பட்ட மின்னல் அனர்த்தம் காரணமாக 6 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகளும் சேதமடைந்துள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகா மைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

உடுவில் பிரதே செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/208 கிராம சேவகர் பிரிவில் இரு குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/279 கிராம சேவகர் பிரிவில் 1 குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/301 கிராம சேவகர் பிரிவில் 2 குடும்பங்களை சேர்ந்த 3 பேரும், மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/426 கிராம சேவகர்



ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் என 19 பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள் ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

# இ.போ.ச. முன்னாள் பிரதித் தலைவர் கைது!

இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் பிரதித் தலைவரான எல். ஏ. விமலரத்ன குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்துக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் கதிர்காமம் வீடு தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இந்த விடயம் தொடர்பில் கதிர்காமம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அசோக்க விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மகன் யோஷித ராஜபக்ஷ, ருஹுணு கதிர்காமம் மகா தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர உள்ளிட்டோரிடம் வாக்குமூலம் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நளிந்த ஜயதிஸ்ஸ இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

ஐ.நா. வெசாக் தின விழா இம்முறை வியட்நாமில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்விலும் ஜனாதிபதி பங்கேற்பார். 6 ஆம் திகதி வரை வியட்நாமில் தங்கி இருப்பார்.

இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன.

## அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். ஊடக அமையத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் செ.சிவசுதன் இன்று ஊடக சந்திப்பை நடத்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் வெகுஜன அமைப்புகளுடன் இணைந்து உழைப்பாளர் தினத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

ஆசிரியர் மற்றும் அத்துறைசார் தரப்பினரது ஊதியம் அதிகரிப்பு, கல்வித் துறையில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது, மக்களின் காணி நிலங்கள் விடுவிப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த மே தினப் பேரணி மே முதலாம் திகதி முற்பகல் இடம்பெறவுள்ளது.

யாழ். மத்திய பஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த மே தினப் பேரணி யாழ். நகரின் பிரதான சாலைகளூடாகப் பேரணியாகச் சென்று யாழ். பொது நூலகம் முன்பாக ஒன்றுகூடி பேரணிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணியில் அனைத்து துறைசார் தரப்பினரும் ஆதரவை வழங்கி பேரணியை வலுப்படுத்துவது அவசியமாகும்." – என்றார்.

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்படுத்தியுள்ளது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். கொள்கைப் பிரகடனத்தில் உள்ள வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமானது.

அரசியலில்பிரகடனப்படுத்தப்படுவதும் நடைமுறைப்படுத்தப்படுவதும் என இரு அம்சங்கள் காணப்படுகின்றன. பிரகடனப்படுத்தப்படுவதற்கும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கும் இடையில் இடைவெளியை விட்டுவிடாமல் சொன்னதை செய்வது சிறந்த அரசொன்றின் குறிகாட்டியாகும். கடந்த இரண்டு தேர்தல்களிலும் சுபீட்சமான நாட்டையும் அழகிய வாழ்க்கையையும் நாட்டு மக்களுக்கு பெற்றுத் தருவோம் எனக் கூறிய தரப்பினரின் வாக்குறுதிகளை நம்பி சுப நேரத்தில் அநுரவிடம் நாட்டை மக்கள் ஒப்படைத்தனர். ஆனால், அரசு வாக்குறுதியளித்த எதையும் இதுவரை நிறைவேற்றவில்லை.

ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அரிசி, பால் மா, தேங்காய் ஆகியவற்றின் விலைகளைக் குறைப்பதாக உறுதியளித்த போதும், பொருட்களின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளன. மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளைக் கூட வழங்க முடியாத அரசு இன்று ஆட்சியில் இருந்து கொண்டிருக்கின்றது. தாம் முன்வைக்கும் முதலாவது வரவு – செலவுத் திட்டத்திலயே 35 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவோம் என இந்த அரசு உறுதியளித்த போதிலும், அந்த வாக்குறுதியும் இன்று மீறப்பட்டுள்ளது." – என்றார்.



# வாள்கள், கஞ்சாவுடன் யாழில் மூவர் கைது!

யாழ்ப்பாணத்தில் நான்கு வாள்கள் மற்றும்கஞ்சாபோதைப்பொருள்களுடன் மூவர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாதகல் பகுதியில் போதைப்பொருள் வியாபாரக் கும்பல் ஒன்று, கூரிய ஆயுதங்களுடன் வீடொன்றில் இருப்பதாகக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், அந்த வீட்டை இளவாலைப் பொலிஸார் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர்.

அதன்போது, மண்ணில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், நான்கு வாள்கள் மீட்கப்பட்டன. தொடர் தேடுதலின்போது, பிறிதொரு இடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோ 600 கிராம் கஞ்சா போதைப்பொருளும் மீட்கப்பட்டன.

அதனையடுத்து வீட்டில் இருந்த மூன்று இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்து இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட

# இராணுவச் சிப்பாய் ஒருவர் போதைப்பொருளுடன் கைது!

வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் பண்டாரகமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா – ஹெய்யன்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய இராணுவச் சிப்பாயே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பண்டாரகமை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் களுத்துறை பண்டாரகமை கிதெல்பிட்டிய பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 6 ஆயிரத்து 230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவரை ஏழு நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸாரின் விசாரணைகளில், சந்தேகநபரான இராணுவச் சிப்பாய் சபுகஸ்கந்த, மீகஹவத்தை, களனி மற்றும் பண்டாரகமை உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார் என்று தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் பல்வேறு பிரதேசங்களில் கொள்ளையிட்டார் எனக் கூறப்படும் தங்க நகைகளும் இரத்மலானை மற்றும் கடுவலை ஆகிய பிரதேசங்களில் உள்ள நகை அடகு கடைகளில் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தென்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


வர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறையில் உள்ள ஹிரணை பகுதியில் நேற்று திங்கட்கிழமை இரவு இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

பாணந்துறை, ஹிரணை மேற்கு மாலமுல்ல பகுதில் உள்ள வீடு ஒன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின்போது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் 35 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளதுடன் 20 வயதான நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோக சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# இலங்கைப் போக்குவரத்து சபையின் இரு பஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை போக்குவரத்து சபையால் யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு புதிய பஸ் சேவைகள் இன்று மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு மானிப்பாய் – ஆலங்குளாய் – அளவெட்டி ஊடாக தெல்லிப்பழை நோக்கி முன்னெடுக்கப்படும் வகையில் ஒரு பஸ் சேவையும் –

காங்கேசன்துறையில் இருந்து பலாலி வீதியூடாக மற்றொரு சேவையுமே இவ்வாறு மீள ஆரம்பிக்கப்பட்டன.

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்னாயக்கவின் ஆலோசனைக்கமைய இலங்கை போக்குவரத்து சபை தலைவர் ஜீவக பிரசன்ன புரசிங்கவின் பிரசன்னத்துடன் பஸ் சேவை ஆரம்பமானது.

நீண்ட காலங்களுக்கு பின்னர் குறித்த வழித்தடங்கள்



ஊடாக பஸ் சேவை மீள ஆரம்பித்ததால் பொதுமக்கள் பலரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீ பவனாந்தராஜா உள்ளிட்ட போக்குவரத்து சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.




# கடந்தகால அரசுகள் போலவே அநுர அரசும் செயற்படுகின்றது

## வடமாகாண தொழிற் சங்கங்களின் சம்மேளனம் சுட்டிக்காட்டு

(எஸ். நிதர்ஷன்)

காலாகாலமாக ஆட்சிக்கு வரும் அரசுகள் தொழில் சங்கங்களை தமக்கு தேவைக்கு ஏற்ப பயன்படுத்திய பின்னர் தூக்கி வீசிவிடுவது வழமை.

ஆனால் தொழில் சங்கங்களின் ஒருமித்த ஆதரவுடன் ஆட்சிப் பீடத்தை பெற்றுக்கொண்ட அநுர தலைமையிலான அரசும் கடந்த கால அரசுகள் போலவே எம்மை தமக்கான பொம்மைகளாக பயன்படுத்த முனைகின்றது.

இவ்வாறு வடமாகண தொழிற் சங்கங்களின் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளதுடன் இவ்வாறான நிலையை ஏற்றுக்கொள்ள முடியாது. அநுர அரசு எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவு செய்து கொடுப்பது அவசியம்.

மே தின ஏற்பாடுகள் குறித்து யாழ். ஊடக அமையத்தில் ஊடக சந்திப் பொன்றை முன்னெடுத்து கருத்துத் தெரிவித்த போது சங்கத்தின் பிரதி நிதிகள் இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் கூறுகையில் –

வடமாகண தொழிற் சங்கங்களின் சம்மேளனம் கடந்த 4 ஆண்டுகளாக மே தினத்தை முன்னெடுத்துள்ளது.

இந்த முறை காலச் சூழல் காரணமாக பிரமாண்டமன முறையில் மே தின எழுச்சி பேரணியை முன்னெடுக்க முடியாத நிலை இருப்பதால், நல்லூர் முன்றலில் இருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் எழுச்சி பேரணி ஆரிய குளம் சந்தியை சென்றடைந்து, ஸ்ரான்லி வீதியூடாக யாழ். நகரை சென்றடைந்து அதன் பின் யாழ். மாவட்ட செயலகம் சென்றடையும். அங்கு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் பேரணி கூட்டம் நடைபெறவுள்ளது.

நாம் இந்த முறை 12 தொழில் சங்கங்களின் ஒத்துழைப்புடன் பேரணியை ஏற்பாடு செய்துள்ளோம்.

அந்தவகையில் இன்றைய அரசின் இத்தகைய போக்கை சுட்டிக்காட்டும் வகையில் கோசங்கள் முன்வைக்கப்படவுள்ளன.– என்று தெரிவித்தனர்.

**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சட்ட விரோத ஒப்பந்தங்கள்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் இலங்கை வந்திருந்த போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

அவற்றில் இடம்பெற்றுள்ள அம்சங்கள் குறித்து பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில அதிர்ச்சி தரும் தகவலை வெளியிட்டு இருக்கின்றார்.

வலுசக்தி மற்றும் மின் கட்டமைப்பு தொடர்பாக இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் இடம்பெற்றிருக்கும் அம்சங்கள் குறித்து அவர் சில விடயங்களை அம்பலப்படுத்தி இருக்கிறார்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு வரும் இந்தியர்களுக்கும் இந்தியாவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் தேசிய நிறுவனங்களுக்கும் எதிராக இந்தக் கருத்திட்டம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட முடியாத வகையில் சிறப்பு உரித்து வழங்கப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

எரிபொருள் குழாய் நிர்மாணிப்பு மற்றும் எண்ணெய் தாங்கி அபிவிருத்தி தொடர்பான முத்தரப்பு ஒப்பந்தத்தில் 7(2) மற்றும் 8 ஆகிய பிரிவுகளில் இந்த கருத்திட்டங்கள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாத வகையில் சிறப்பு உரித்து வழங்கப்பட்டு இருப்பதாக அவர் கூறுகிறார்

அதேபோல இலங்கையின் தலைமன்னாருக்கும் தமிழகத்தின் மதுரைக்கும் இடையிலான உத்தேச மின்விநியோகக் கருத்துட்ட ஒப்பந்தத்தின் ஏழாம் பிரிவில் இந்தத் திட்டதுக்காக இலங்கைக்கு வரும் இந்தியர்களுக்கும் இந்தியாவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் தேசிய நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் எதிராக அந்தக் கருத்திட்டம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்றும் அது தொடர்பான ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது என்கிறார் அவர்.

இலங்கையின் பொதுச் சட்டங்களின் பிரகாரம் பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கு எதிராக மட்டுமே வழக்குத் தாக்கல் செய்ய முடியாது.

அப்படி இருக்கையில், இலங்கையில் வெளிநாட்டுத் தரப்பினரின் நடவடிக்கைகள், செயற்பாடுகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்று ஓர் ஒப்பந்தம் செய்வது அரசமைப்பின் 12(1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ‘சட்டத்தின் முன் அனைவரும் சமம்’ என்ற அடிப்படைத் தத்துவத்தை மீறிய செயற்பாடாகும்.

அரசமைப்புக் கோட்பாடுகளுக்கு மாறான விதத்தில் - மீறுகின்ற வகையில் - இத்தகைய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றமையினால் அவை சட்ட விரோதமானவை என்று உதய கம்மன்பில கூறுவதில் நிறைய அர்த்தங்கள் உண்டு.

இதற்கு எதிராக உயர்நீதிமன்றத்திடம் நிவாரணம் கோரி, நிலைமையை சீர் செய்யும் நடவடிக்கையை எதிர்த்தரப்பு சட்டத்தரணிகள் முக்கியத்துவம் கொடுத்து முன்னெடுக்க வேண்டும். அது ஒரு தேசியக் கடமையாகும்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் சபையாக மாற்றுவோம்



(றிபாஸ்)

மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய ஒரு சபையாகவும், ஏனைய சபைகளுக்கொரு முன் மாதிரியானதாகவும் அட்டாளைச் சேனை பிரதேச சபையை மாற்றி அமைப்போம் என்று இக்ராஹ் வட்டார வேட்பாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ் தெரி வித்துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேசத் தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரை யில்,

கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் நூறு வீதம் வாக்களித்த ஒரு பிரதேசமாக அட்டாளைச்சேனை காணப்பட்டது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீ மின் வழிகாட்டலின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் அதிகமான உள்ளூராட்சி மன்ற சபைகளைக் கைப்பற்றி ஆட்சி அமைப்பது மாத்திரமல்ல, சகல இன மக்களின் நாளாந்த, அன்றாட தேவை களை உடனுக்குடன் செய்யும் வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்வதே எமது நோக்கமாகும்.

தேர்தல் பிரச்சாரத்தில் வீடு வீடாக எங்களது வேட்பாளர்கள் செல்கின்ற போது மக்கள் தருகின்ற ஆதரவையும், அரவணைப்பையும் பார்க்கின்ற போது அதிகமான வாக்குகளைப் பெற்று ஆட்சி அமைப்போம் என்பதில் எவ்வித மாற்று கருத்தும் கிடையாது.

ஒலுவில், பாலமுனை, அட்டாளைச் சேனை போன்ற பிரதேசங்களில் தரமான, தகுதியான வேட்பாளர்களைச் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நிறுத்தியுள்ளது. ஆகவே காலை யில் நேரத்தோடு சென்று உங்களது வாக்குகளை மரச்சின்னத்துக்கு அளிக்கு மாறும் கேட்டுக் கொள்கிறேன்.– என்றார்.

## காவத்தையில் தேர்தல் கூட்டம்!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

தேசிய மக்கள் சக்தியின் உள்ளூ ராட்சி மன்ற வேட்பாளர்களை வெற்றி பெற செய்வதற்கான வெற்றிக் கூட்டம் காவத்தையில் சனிக்கிழமை நடை பெற்றது.

இதில் மகளிர் மற்றும் சிறுவர் விவ கார அமைச்சர் சரோஜா போல் ராஜ், பெருந்தோட்டம் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தர லிங்கம் பிரதீப், இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீலூசா லக்மாலி, கட்சியின் ஆதரவாளர் கள் என பலரும் கலந்து கொண்ட னர்.





# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## ஒப்பீட்டு விகிதாசார அடிப்படையில் திருமலையில் முஸ்லிம்கள் அதிகம்

### முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

ஒப்பீட்டு விகிதாசார அடிப்படையில் ஆகக் கூடிய முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரே மாவட்டம் திருகோணமலை மாவட்டமாகும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாணத்துக்கு மேற்கொண்டிருந்த தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக மூதூர் கலாசார மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேட்பாளர் மற்றும் மக்கள் சந்திப்புகளில் பங்கு பற்றி உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இதனை நிரூபித்து காட்டுவது



மட்டுமல்லாமல் முஸ்லிம்களும் இந்த நாட்டின் கௌரவிக்கப் படவேண்டிய ஒரு தேசிய இனம். இந்த மாவட்டத்தில் இம்முறை 6 இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியை கைப்பற்றி இவ்வரசுக்கு தக்க பாடம் புகட்டுவோம்.

முஸ்லீம் இளைஞன் ஒருவரை ஸ்டிக்கர் ஒட்டியதற்காக கைது செய்வதற்காகக் கையொப்பம் இட்ட ஜனாதிபதி, கடந்த காலத்தில் பயங்கரவாத சட்டத்தை, சட்டத்தில் இருந்து நீக்க வேண்டும் என கூறியவர். தற்போது இதற்குப் பதிலான சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என கூறுகின்றனர்.

அது மட்டுமன்றி இவர்கள் எத்தனை ஸ்டிக்கர்களை ஒட்டியிருப்பார்கள். அம்பாறையில் தேசிய பட்டியலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனுக்கும் வித்தியாசம் தெரியாமல் பேசிக் கொள்கிறார்.

மூதூர் முதன்மையானதாக வரலாற்று ரீதியான வெற்றியை மீண்டும் உறுதி செய்யும் என்ற நற்செய்தியை கேட்டு மிகவும் சந்தோசம் அடைகிறேன்.- என்றார்.

இந்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி ஜே. எம் லாஹிர் உட்பட வேட்பாளர்களான உமர் ஜவாத், பி.ரி.எம். பைசர், அப்துல் ஜாயா அனஸ், எச்.எம்.ஏ. மனாப், என்.எம்.எம். றம்சாத் ஆகியோரும் உரையாற்றினர்.

## ஏமாற்றும் கலாசாரத்தில் இருந்து விடுபட்டு சேவையாற்றக் கூடியவரைத் தெரியுங்கள்!

### சுயேச்சை வேட்பாளர் எம். ஏ. நளீர்



(நூருல் ஹுதா உமர், ஏ.எச்.எம். ஹாரீஸ்)

நாவிதன்வெளி பிரதேச சபை தேர்தலில் சுயேச்சை குழு -01 கால்பந்து சின்னத்தில் போட்டியிடும் அணியினரின் தலைமை அலுவலகம் சாளம்பைக் கேணி வடக்கு வட்டாரம் ஆலடி சந்தியில் திறந்து வைக்கப்பட்டது.

நாவிதன்வெளி பிரதேச சபை தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டு இரட்டை தொகுதிகளை வென்றெடுப்பதற்கு பிரபல சமூக சேவையாளர் நளீர் பௌண்டஷன் நிறுவுனர் எம்.ஏ. நளீர் கால்பந்து சின்னத்தில் களமிறங்கியுள்ளார்.

அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வாழும் பிரதேசத்தில் மக்களுக்கு உயரிய சேவைகளை வழங்க வேண்டும் என்ற நோக்கில்தான் தேர்தலில் போட்டியிடுகின்றேன்.

சாளம்பைக்கேணி வடக்கு வட்டார மக்கள் தனது வெற்றிக்காக வாக்களிக்க தீர்மானித்து விட்டார்கள். அவர்கள் என்றும் என்னுடனே இருப்பார்கள். நான் அவர்களுக்கு முடியுமான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பேன். அவர்களுக்காக எனது வீட்டின் கதவு 24 மணி நேரமும் திறந்திருக்கும்.

விசேடமாக ஊரின் அபிவிருத்திக்கும், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கும், மக்களின் வாழ்வாதார வசதிகளுக்கும் நான் பெரும் பங்காற்றி இருப்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

இதன் அடிப்படையில் எமது வெற்றிக்காக விளையாட்டு கழக உறுப்பினர்கள், மகளிர் அமைப்புக்களின் உறுப்பினர்கள், கல்விமான்கள், வர்த்தகர்கள், அரச தனியார் துறை ஊழியர்கள் என அனைவரதும் பங்களிப்பின் மூலம் எதிர்வரும் தேர்தலில் வெற்றியீட்டுவதன் ஊடாக வட்டார மக்களுக்கு மாத்திரமன்றி சகல மக்களுக்கும் எமது சேவைகளை திருப்திகரமாக வழங்க முடியும்.

கடந்த காலங்களில் பல அரசியல் கட்சிகள் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றும் கலாச்சாரத்தில் இருந்து விடுபட்டு உண்மைக்கு உண்மையாக சமூகத்துக்கு சேவையாற்ற கூடிய ஒரு வேட்பாளரை தெரிவு செய்ய வேண்டும்.

இதன் அடிப்படையில் எமது கால்பந்து சின்னத்துக்கு வாக்களித்து இரட்டை தொகுதிகளை வென்றெடுக்க அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்.-என்றார்.

இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் பிரதி தவிசாளர் ஏ.கே. அப்துல் சமத், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் சுபைதீன், கால்பந்து சின்னம் சுயேச்சை வேட்பாளர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# பொய்யான பிரசாரங்களை நம்பி வாக்களிக்க மக்கள் தயார் இல்லை

## காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் ஜாஹீர்

(நூருல் ஹுதா உமர்)

ஏமாற்று கதைகளை நம்பி பொய்யான பிரசாரங்களுக்கு வாக்களிக்கும் மக்களாக மாளிகைக்காடு மக்கள் இல்லை.

இனவாதிகளின் கோர முகங்கள் வெளிப்பட்டபோது அவர்களின் சலுகைகளுக்காக சோரம் போனவர்கள் மத்தியில் மக்கள் தந்த அமானிதத்தை பொறுப்புடன் காத்து நிறைவான அபிவிருத்திகள் செய்த முஸ்லிம் சமூகத்தின் குரலாக இருந்த எங்களின் சமூகப்பணி மக்கள் மத்தியில் எப்போதும் நன்றியுடன் நினைவு கொள்ளப்படுகிறது.

இதனாலேயே மக்கள் எப்போதும் எங்களுடன் இணைந்து பயணிக்கிறார்கள்.

இவ்வாறு காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளரும், காரைதீவு பிரதேச சபை சுயேட்சை குழுத் தலைமை வேட்பாளருமான ஏ.எம். ஜாஹீர் தெரிவித்தார்.

பிரதேச சமூக சேவகர்கள் ஒன்றிணைந்து காரைதீவு பிரதேச சபையில் தையல்இயந்திரம் சின்னத்தில் சுயேச்சையாக போட்டியிடுகிறார்கள். அவர்களின் தேர்தல் செயற்பாட்டு அலுவலகம் மாளிகா வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

மாளிகைக்காடு மேற்கு வேட்பாளர் எஸ். பஸ்லூன், பட்டியல் வேட்பாளர்கள் சகிதம் அலுவலகத்தைத் திறந்து வைத்து



ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர்,

திண்மக்கழிவகற்றி, தெருவிளக்குகளை பராமரித்து, வடிகான்களை சீரமைத்து பிரதேச சபைக்கு உரிய கடமைகளை செய்பவர்களாக மட்டும் இல்லாமல், கடந்த காலங்களில் நிறைய அரசியல் தலைவர்களின் உதவியை கொண்டு வந்து பிரதேச, இனவாத சிந்தனைகள் இல்லாமல் சகல பிரதேசங்களுக்கும் சேவையாற்றியுள்ளோம். பல ஏழைகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்கும் நாங்கள் பக்கபலமாக இருந்துள்ளோம். இவற்றை எல்லாம் மக்கள் நன்றாக அறிந்து வைத்துள்ளார்கள்.

பழகிப் பார்த்து அரசியல் செய்யும் நேரத்தில் நாங்கள் இல்லை. மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். மாளிகைக்காட்டின் அரசியல் தலைமைத்துவங்கள் எங்கள் அணியிலேயே இருக்கின்றன. படித்த மக்கள் முதல் பாமர மக்கள் வரை ஜனநாயக அரசியல் செய்பவர்கள் நாங்கள் என்பதை விளங்கித் தபால் மூல வாக்கிலும் நிறைய வாக்குகளை எங்களுக்கு வழங்கியுள்ளனர் என்று அறிகிறோம்.

மே 06 ஆம் திகதி மாலை எங்களின் வெற்றிச் செய்தியை மக்கள் அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்குத் தெளிவாக இருக்கிறது.

ஏமாற்றுக் கதைகளை நம்பிப் பொய்யான பிரச்சாரங்களுக்கு வாக்களிக்கும் மக்களாக மாளிகைக்காடு மக்கள் இல்லை என்பதை பல தடவைகளில் எங்களின் மக்கள் நிரூபித்துள்ளார்கள். இனியும் மக்கள் உண்மையின் பக்கமாக நின்று அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் சக்தி கொண்ட எங்களுடனே பயணிப்பார்கள்.- என்றார்.

# உங்கள் ஊரிலிருந்து ஒருவரை பிரதேச சபைக்கு அனுப்புங்கள்

## அனுஷா சந்திரசேகரன் தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

அகரபத்தனை பிரதேச சபைக்கு ஜனநாயக தேசிய கூட்டணியின் தபால்பெட்டி சின்னத்தில் போட்டியிடும் வீரமலை குணசேகரன் வேட்பாளரை ஆதரிக்கும் மக்கள் சந்திப்பொன்று அகரப்பத்தனை ஹாடலி பகுதியில் இடம்பெற்றது.

இதில் சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் அனுஷா சந்திரசேகரன் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது பொதுமக்களிடம் உரையாற்றிய அனுஷா சந்திரசேகரன்,

உங்கள் ஊருக்கு சேவை செய்ய, உங்கள் ஊருக்கான அபிவிருத்திகளை செய்ய, உங்கள் ஊரை முன்னேற்ற மடைய செய்ய காலா காலமாக அந்தக் கட்சி, இந்த கட்சி என்று வாக்களித்தது போதும். உங்கள் ஊரிலிருந்து ஒருவரை தெரிவு செய்யுங்கள்.

ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லாத, மக்களோடு மக்களாக இருப்பவர்களையே நாம் இந்த முறை தபால் பெட்டி சின்னத்தில் அகரபத்தனை பிரதேச சபைக்கு களமிறக்கியிருக்கிறோம்.

ஆகவே இவர்களை ஆதரித்து, பிரதேச சபைக்குத் தெரிவு செய்வதன் மூலம் பிரதேச சபையால் வழங்கப்படும் சேவைகளை எமது மக்களுக்கு இலகுவாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.



ஆகவே இந்த முறை தனித்துவம் காத்த தலைவரின் வழியில் பயணிக்கும் எம்மவர்களுக்கு தபால் பெட்டி சின்னத்துக்கு வாக்களித்து அமோக வெற்றிபெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.- என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# தோட்டத் தொழிலாளர் சம்பள விடயத்தில் யோசனை முன்வைப்பது வேடிக்கையானது

## இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் விசனம்

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள சம்பள விடயத்தில் யோசனை முன்வைப்பதாகத் தோழர் கூறுவது வேடிக்கையாக உள்ளது.

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹட்டன் எபோட்ஸ்லி தோட்டப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் கருத்துரைத்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த ஜீவன் தொண்டமான்,

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் 2000 ரூபா மற்றும் 1700 ரூபா பெற்றுத் தருவதாக கூறிய அரசு, தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் யோசனை ஒன்றை முன்வைப்பது என்பது வேடிக்கையாக உள்ளது.

எம்மை பொறுத்தமட்டில் மக்கள் மத்தியில் சென்று கசப்பான உண்மையைக் கூறுகிறோம். ஆனால் மக்கள் எமக்கு வாக்களிக்க மறுக்கிறார்கள். சிலர் இனிப்பான பொய்களை கூறுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு வாக்களிக்கிறீர்கள். சிலர் இரண்டாயிரம் வீடுகளைத் தருவதாக ஏலம் விட்டார்கள் வீடு என்பது எமக்கு முக்கியமல்ல. அதனை நான் கூறியதால் என்னை விமர்சனம் செய்தார்கள்.



வீடைப்பு திட்டம் என்பது அனைவருக்கும் கிடைக்காது. எமக்குக் காணியே அவசியமானது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இருந்த காலப் பகுதியில் காணி ஒதுக்கீடுக்காக 4000 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்தோம். இந்த முறை உள்ள வரவு செலவு திட்டத்தில் அதற்கான ஒதுக்கீடு காணாமல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து ஜனாதிபதிகளும் வீடமைப்பு மற்றும் சம்பளம் தொடர்பாக பேசினால் மலையக மக்கள் வாக்களிப்பார்கள் என்று எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த அரசு தமிழில் தனி வீட்டுத் திட்டம் கொண்டு வருவதாகவும் சிங்கள மொழியில் மாடி வீட்டுத் திட்டம் கொண்டு வருவதாக கூறுகிறது. இதில் எது உண்மை என்று தெரியவில்லை. இதற்கு முன்னர் மலையகத்தில் உள்ள அமைச்சர்கள் அளுமையோடு செயற்பட்டார்கள். இந்த அரசில் மலையகம் ஆளுமையை இழந்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக முகம் கொடுக்க போவது யார் யாரும் இல்லை. இந்த அரசைப் பொறுத்த வரையில் மகா நடிகர்கள் உள்ளார்கள். ஆசை வார்த்தைகளைப் பேசி வாக்குகளை பெற்றுக்கொண்டதன் பின்னர் மக்களை ஏமாற்றும் கூட்டம்தான் இந்த அரசு. எமது சமூகத்தில் உள்ள வைத்தியர்கள் சட்டத்தரணிகள் போன்றோரை தோழருக்கு தெரியவில்லை.

நாம் வறுமையை மாத்திரம் பார்க்கின்றோமே தவிர பெருமையைப் பார்ப்பதில்லை. எமது வரலாறு ஒட்டு மொத்தமாக மறைக்கப்பட்டுள்ளது. நாம் இந்திய பிரஜைகள் அல்ல. நமக்கென ஒரு அடையாளம் உள்ளது. மலையகத்தில் 66 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்ட போதிலும் தீர்வு வரவில்லை.-என குறிப்பிட்டார்.

# மஸ்கெலியா நகரில் தேர்தல் கூட்டம்!





(மஸ்கெலியா)

தேசிய மக்கள் சக்தியின் மஸ்கெலியா பிரதேச சபைக்கு போட்டி இடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடி பிரசார கூட்டம் மஸ்கெலியா நகரில் உள்ள தனியார் வாகன தரிப்பிடத்தில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஞ்சுல சுரவீர தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலைச் செல்வி மற்றும் சத்தியமூர்த்தி உட்பட மஸ்கெலியா பிரதேச சபைக்கு போட்டி இடும் வேட்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில், கடந்த 76 ஆண்டு காலம் நாட்டையும், மாகாண சபைகளையும், பிரதேச, நகர, மாநகர, சபைகளையும் ஆண்ட அரசியல் கட்சிகள் சூறையாடி விட்டன.

இந்த முறை நாட்டின் ஜனாதிபதி மற்றும் பொது தேர்தலில் 159 ஆசனங்கள் வழங்கிய நீங்கள் நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் எமது பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும் என அங்கு மக்களிடம் கேட்டுக் கொண்டனர்.

நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

# அரசு தேர்தலை நடத்துவதை மட்டுமே வேலைத் திட்டங்களாக கொண்டுள்ளது





(வாலகிருஸ்ணா)

புதிய அரசு தேர்தலை நடத்துவதை மட்டுமே வேலைத் திட்டங்களாக கொண்டுள்ளது. வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையைக் கண்டுகொள்ளவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்துக்குள் திட்டமிட்டு புகுத்தி எமது போராட்டத்தை இல்லாமல்செய்யும் முயற்சியை புதிய அரசு முன்னெடுத்து வருகிறது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி திருமதி அமலநாயகி அமல்ராஜ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று (28) நடைபெற்றன.

மட்டக்களப்பு அமெரிக்க மிசன் மண்டபத்தில் மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி திருமதி அமலநாயகி அமல்ராஜ் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கலந்துகொண்டனர்.

இதன்போது தலைவராக மீண்டும் திருமதி அமலநாயகி அமல்ராஜ் தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக திருமதி ராஜன் தேவகியும் பொருளாளராக ரவிச்சந்திரன் வினோஜியாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் உப தலைவராக வீ.குரு குலசிங்கமும் உப செயலாளராக செ.திலகவதி தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு பகுதிகளுக்குமான இணைப்பாளர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டது.

நிர்வாக தெரிவைத் தொடர்ந்து சங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் குறித்துக் கருத்துப் பகிர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி மேலும் தெரிவிக்கையில்,

எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கேட்க வேண்டிய காலச் சூழ்நிலையில் இருக்கின்றோம். தற்போதுள்ள ஆட்சி மாற்றத்திலும் நாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளோம். புதிய ஆட்சி வந்ததும் ஏதோ புதிய ஆட்சி வந்துள்ளது. எங்களுக்கு அனைத்தும் கிடைத்துவிட்டது என்று நீங்கள் ஒருபோதும் கனவு காணவேண்டாம்.

கடந்தகால ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றி எவ்வாறு எமது இனத்தை அழித்தார்களோ அதனை விட படுமோசமான அரசியல் வியூகத்துக்குள்ளேயே நாங்கள் தற்போது நின்றுகொண்டிருக்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயப் பரப்புக்குள் பல விடயங்களை செய்யப்போகின்றோம், உண்மையைக் கண்டறியப் போகின்றோம், நியாயங்களைச் சொல்வோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் மூன்று தேர்தல்களை நடத்தியது மட்டுமே வேலைத் திட்டமாக இருந்ததே தவிர காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தை, வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையைத் தீர்க்கவில்லை.

மாறாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்திற்குள் திட்டமிட்டு புகுத்தி எமது போராட்டத்தை இல்லாமல் செய்யும் முயற்சியை திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றது.

நாங்கள் கேட்டுக்கொண்டிருப்பது உள்ளகப் பொறிமுறை அல்ல. சர்வதேச நீதிப்பொறிமுறையையே நாங்கள் கேட்டுநிற்கின்றோம். எங்களது போராட்டங்களின் வடிவங்களே இன்று சர்வதேச அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுக்கின்றது. அதன் காரணமாகவே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அலுவலகத்தை ஒரு மாயையாகக் காட்டி எமது போராட்டத்தையும் கோரிக்கையையும் முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம் தங்களை நல்லரசாக காட்ட சிங்கள அரசு முயற்சிக்கின்றது. இது தொடர்பில் நாங்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

இன்று பல்வேறுபட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்துக்குள் வந்து, அதற்குள் பிளவுகளை ஏற்படுத்தி அதனை தங்களுக்கு சார்பாக கையாண்டு தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி மனரீதியான தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் உணர்வுகளை மழுங்கடிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றனர்.

அரசு மற்றும் அதன் புலனாய்வு கட்டமைப்புகள் சூழ்ச்சிகளை முன்னெடுத்துள்ள அதேநேரத்தில் எங்களுடன் அதிகளவின் பயணிக்கின்றவர்களும் இதனை பிளவுபடுத்தும் முயற்சியில் செயற்படுகின்றனர்.

நாங்கள் இன்று வீதியில் நின்று போராடுவது எங்களது சந்ததிகளுக்காக எங்களுக்கு நடந்த இந்த அநியாயம், அட்டூழியங்கள் எதிர்கால சமூகத்துக்கு வரக்கூடாது என்பதற்காகவே நாங்கள் போராடி வருகின்றோம்.- என்றார்.







# மட்டு.திராய்மடுவில் திருநாவுக்கரசர் குருபூசை!

(பழுவூரான்)

“தமிழ் போற்றி சைவம் வளர்ப்போம்” எனும் தொனிப் பொருளில் சிவ தொண்டர் திருக்கூட்டத்தின் ஏற்பாட்டில், சிவன் ஆலய அறநெறிப் பாடசாலை, ஈழத்து திருக்காளாத்தீஸ்வரர் ஆலயம், நடராஜர் சைவசித்தாந்தப் பயிற்சி மையம் ஆகியன இணைந்து நடத்திய திருநாவுக்கரசர் குருபூசை நிகழ்வு மண்முனை வடக்கு திராய்மடு சுவிஸ் கிராம சிவன் ஆலய அறநெறிப் பாடசாலையில் ஞாயிற்றுக்கிழமை (27) இடம்பெற்றது.

ஈழத்து திருக்காளாதீஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஆன்மீக எழுச்சி ஊர்வலம் ஆரம்பமாகி, சிவன் ஆலய அறநெறிப் பாடசாலையை வந்தடைந்ததும் குருபூசை நடைபெற்றது.

ஈழத்து திருக்காளாத்தீஸ்வரர் ஆலயத் தலைவர் இ.இரத்தினகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆன்மீக சொற்பொழிவுகளும், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திறமையை வெளிக் கொண்டுவரும் முகமாகச் சமயம் சார்ந்த போட்டிகளும் நடைபெற்றன.

இதன்போது இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன.

அத்தோடு தாய்த்தமிழ் உறவுகளுக்கு சிவதொண்டர்களால் சிவசின்னங்களும் அணிவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சிவதொண்டர் திருக்கூட்ட சிவ தொண்டர்கள், சைவப் புலவர்கள், மட்டக்களப்பு இந்து மகளிர் மன்ற உறுப்பினர்கள், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

சிவதொண்டர் திருக்கூட்டத்தால் இதுவரை 53 ஆயிரத்து 350 தாய்த் தமிழ் உறவுகளுக்கு சிவசின்னமான உருத்திராக்கம் அணிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# அக்கரைப்பற்று வர்த்தகருக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு





(அஸ்லம் எஸ்.மௌலானா)

அக்கரைப்பற்று மாநகர சபையால் வர்த்தகர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விஷேட விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று திங்கட்கிழமை (28) ஹல்லாஜ் மண்டபத்தில் அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் எம்.அன்சார், பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.சலீம், நுகர்வோர் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களான இஸட். எம். சாஜித், எம்.எச்.எம். றிபாஜ் மற்றும் அக்கரைப்பற்று வர்த்தகர் சங்கத்தின் நிர்வாகிகள் உட்பட வர்த்தகர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களும் வியாபார அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய ஆணையாளர், வர்த்தகர்களுக்கு இதனை இலகுபடுத்தும் பொருட்டு அடுத்த வாரமளவில் தமது மாநகர சபையால் நடமாடும் சேவை ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. அதன்போது ஆதன வரி உள்ளிட்ட சேவைக் கட்டணங்களுடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்து, வியாபார அனுமதிப் பத்திரங்களை இலகுவாகவும் துரிதமாகவும் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெளிவுபடுத்தினார்.

திண்மக்கழிவகற்றல் சேவையை வினைத்திறனுடன் இன்னும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதற்கு வர்த்தகர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க முன்வர வேண்டும் எனவும் ஆணையாளர் நௌபீஸ் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் நுகர்வோர் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர் இஸட்.எம். சாஜித், வர்த்தகர்களுக்கான விழிப்புணர்வு விரிவுரை ஒன்றை நிகழ்த்தினார்.

இதன்போது பொருள்களின் விலைகளை காட்சிப்படுத்தல், அவற்றின் உற்பத்தி, தரம் மற்றும் காலாவதி உள்ளிட்ட விடயங்களில் நுகர்வோர் அதிகார சபையின் சட்டங்கள், ஒழுங்கு விதிகள் தொடர்பாக தெளிவுபடுத்தி, அறிவுறுத்தல்களை வழங்கிய அவர், தமது வியாபார நடவடிக்கைளின்போது வர்த்தகர்கள் இவற்றை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தியதுடன் தவறும் வர்த்தகர்கள் மீது எவ்வித தயவுமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.சலீம், உணவு விடயங்களில் வர்த்தகர்கள் பேண வேண்டிய நடைமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இந்த நடைமுறைகளை கடைப்பிடிக்கத் தவறும் வர்த்தகர்களுக்கு எதிராக உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தினார்.





# எல்பட தோட்ட தொங்கு பாலத்தை புனரமைக்குமாறு கோரும் மக்கள்

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

எல்பட தோட்டப் பகுதிக்கு செல்லும் பிரதான தொங்கு பாலம் புனரமைப்பு தொடர்பாக ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நோர்வூட் பிரதேச சபைக்கு உட்பட்ட நோர்வூட் எல்பட தோட்டப் பகுதி மக்கள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தும் தொங்கு பாலம் சேதமடைந்து காணபடுகின்றது. நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார திஷாநாயக்க பாலத்தைப் புனரமைக் நடவடிக்கை எடுக் வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நோர்வூட் எல்பட கீழ்பிரிவு மற்றும் மேல்பிரிவு ஆகிய தோட்டப் பகுதிகளை சேர்ந்த பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் நாளாந்தம் இந்தத் தொங்கு பாலத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

நாட்டிலும் பலதரப்பட்ட அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றாலும் தாம் பிரதான பாலமாகக் காணப்படும் இந்தப் பாலத்தைப் புனரமைப்பதற்கு எவரும் முன்வரவில்லை.

கடந்த காலங்களில் நோர்வூட் பிரதேச சபை ஊடாக 13 லச்சம் ரூபா நிதி ஒதுக்கிட்டில் பாலத்தைப் புனரமைப்பதாக கூறி வெறுமனே வாகை பலகையைக் கொண்டு அமைத்துள்ளார்கள். இந்தப் பாலம் நீண்ட காலமாகப் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றமையால் கடந்த காலங்களில் உயிரிழப்புகள் ஏற்பட்ட சம்பவங்களும் பதிவாகியிருக்கின்றன.

நோர்வூட் தேசி கல்லூரி மற்றும் ஹலன்ஸ் கல்லூரி, பொகவந்தலாவ சென்.மேரீஸ் தேசிய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கு செல்லும் மாண-வர்களும் நளாந்தம் இந்த தொங்கு பாலத்தையே பயன்படுத்தி வருகின்றனர். இந்தப் பாலத்தில் பொருத்தப்பட்டிருக்கும் பலகைகள் உக்கிய நிலையில் காணப்படுகின்றன என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுவரை காலமும் மலையகத்தில் எந்த ஒரு அரசியல்வாதிகளும் இந்த தொங்கு பாலம் குறித்து அக்கறை செலுத்தவில்லை. இந்த தேசிய மக்கள் சக்தியின் அரசு, தோட்ட மக்கள் நாளாந்தம் பயன்படுத்தும் இந்த தொங்கு பாலத்தைக் கொங்கீட் பாலமாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# கல்முனை வலய அலுவலக வீதி ஹரீஸின் நிதியில் திருத்தியமைப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலயத்தின் பணிமனை அமைந்துள்ள வலயக்கல்வி அலுவலக வீதி பாவனைக்குப் பொருத்தமற்றதாக காணப்பட்டதை கவனத்தில் கொண்டு முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் நிதியில் இருந்து கொங்கிறீட் வீதியாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

டீ-100 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 40 லட்சம் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்டது. இந்தக் கல்முனை வலயக்கல்வி அலுவலக வீதி நிறைவுப் பணிகளை கள விஜயம் செய்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பார்வையிட்டார்.

இந்த விஜயத்தில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ், வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல். நூருல் ஹுதா உட்பட முன்னாள் எம்.பி ஹரீஸின் இணைப்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்முனை பிராந்திய கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடிய முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ், கல்முனை வலய கல்வி எழுச்சிக்கு முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினார்.

# நிர்வாக சேவையின் சிறப்பு தர அதிகாரியாக அஸ்மி பதவியுயர்வு



(அஸ்லம் எஸ்.மௌலானா, அபு அலா)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரான ஏ.எல்.எம். அஸ்மி 01.01.2025 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை நிர்வாக சேவையின் சிறப்பு தர அதிகாரியாக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இலங்கை பொதுச்சேவை ஆணைக் குழுவால் இத்தரத்துக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்ட 23 நிர்வாக சேவை அதிகாரிகளுள் ஒரேயொரு முஸ்லிம் அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொத்துவில், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர், அக்கரைப் பற்று மாநகராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளரும், பதிவாளரும், கல்முனை மாநகராட்சி ஆணையாளர், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) ஆகிய பதவிகளை வகித்த இவர் வினைத்திறன் மிக்க அதிகாரியாக கடமையாற்றியுள்ளார்.

சிறந்த ஆளுமை மிக்க நிர்வாகியான இவர் இலங்கை நிர்வாக சேவையில் 22 வருடங்களை பூர்த்தி செய்துள்ளார். அரச கடமையினை சட்ட விதிமுறைகளை பேணி, தான் எடுத்த உறுதி மற்றும் சத்திய உரை என்பவற்றுக்கு ஏற்ப நேர்மையாகக் கடமையாற்றும் அதிகாரி என்று அறியப்பட்டிருக்கிறார்.





### உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற

# அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவர்கள் கௌரவிப்பு

அச்சுவேலி மத்திய கல்லூரியில் 2024 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் நா. மகேந்திரராஜா தலைமையில் இன்று (29) நடைபெற்றது.

இந்த நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக லண்டனில் இருந்து வருகை தந்திருந்த கல்லூரியின் பழைய மாணவன் து.நிர்மலரோஜன் மற்றும் ஓய்வுநிலை அதிபர் கு.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கான அன்பளிப்புக்கள் மற்றும் விழாவுக்கான முழு அனுசரணையையும் து.நிர்மலரோஜன் வழங்கியிருந்தார்.

அத்துடன் கல்லூரியின் நீண்ட நாள் தேவையாகவிருந்த பிரதான மண்டபத்துக்கான ஒலியமைப்புக்கான கருவிகளை மூன்று லட்சம் ரூபா செலவில் இன்றைய தினம் அன்பளிப்புச் செய்தார்.






# பாவேந்தரெனவே பாரினில் திகழ்கிறார்!

**(பாரதிதாசனின் பிறந்தநாள் இன்றாகும்)**

பாரதி வந்தார் பற்பல பாடினார்
பண்டிதர் ஒதுக்கினார் பாமரர் ஏந்தினார்
காரிருள் போக்கிடும் கதிரவன் ஆகினார்
கன்னித் தமிழின் காவலன் ஆனார்

பாட்டில் புதுமை பதத்தில் புதுமை
ஊட்டியே கவிதை உவப்பாய் அளித்தார்
நாட்டை நினைத்து நல்லன மொழிந்தார்
நாடே அவரின் உயிராய் இருந்தது

பாரதி காலம் கவிமணி இருந்தார்
நாமக் கல்லின் நற்கவி இருந்தார்
எட்டய புரத்து பாரதி மூச்சை
சுப்பு ரத்தினமே சுவாசித்து நின்றார்

நாமக் கல்லார் நற்கவி ஆவார்
கவிமணி தமிழின் கற்கண் டாவார்
பரதி தாசனாய் வந்தார் ஒருவர்
அதுவே அவரின் ஆசியே ஆகும்

சுப்பு ரத்தினம் எழுந்தார் தாசனாய்
சுப்பிர மணிய பாரதி வாழ்த்தினார்
வாழ்த்திய வாழ்த்து வளர்ந்தே வந்தது
மாநிலம் பாரதி தாசனைப் பெற்றது

அன்னிய ஆட்சியில் பாரதி வாழ்ந்தார்
அடிமை என்பது அனலாய் கொதித்தது
அனலை அகற்றப் பாரதி பாடினார்
அடிமைக் கெதிராய் படைப்புகள் ஈந்தார்

பாரதி தாசனின் காலமோ வேறு
அடிமை அகன்று சுதந்திரம் மலர்ந்தது
தமிழே ஆட்சி தமிழே தலைமை
அதனால் தமிழை அமுதம் என்றார்

பாரதி தமிழை தேனாய் ஆக்கினார்
அவரின் தாசனோ உயிராய் ஆக்கினார்
பரதி வழியில் பயணந் தொடரினும்
அவரின் சிந்தனை புதிதாய் மிளிர்ந்தது

கல்வியை இருவரும் கண்ணே என்றனர்
பெண்ணின் கல்வியை பெரிதாய் எண்ணினர்
குருவின் கருவை மனத்தில் கொளினும்
அவரின் சிந்தனை அகன்றே நின்றது

பாரதி உள்ளம் புதுமைகள் இருந்தும்
பக்தியை பாரதி பக்குவம் என்றார்
பாரதி தாசனோ பக்தியைப் பாரா
புரட்சிக் கவியாய் ஊர்வலம் வந்தார்

பாரதி பாடல்கள் திரைக்கு வந்தன
பாரதி தாசனே திரைக்குள் நுழைந்தார்
நாடகம் எழுதினார் நடிக்கவும் செய்தார்
நாட்டுப் பாடலை நயமுடன் அணைத்தார்

புரட்சிக் கவிஞராய் இருவரும் எழுந்தார்
புதுமைகள் புகுத்தி கவிஞராய் ஒளிர்ந்தார்
பாரதி வாழ்த்திய கவிஞராய் அமைந்தார்
பாவேந்த ரெனவே பாரினில் திகழ்கிறார்.

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.**







# ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் உள்ள 48 சுற்றுலாத் தலங்களுக்கு பூட்டு

## தொடரும் பயங்கரவாத தாக்குதல் எச்சரிக்கை

ஜம்மு- காஷ்மீர் அரசு மாநிலத்தில் உள்ள 87 சுற்றுலாத் தலங்களில் 48 இடங்களை மூடியுள்ளது.

கடந்த வாரம் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து, மேலும் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடக்க வாய்ப்புள்ளதாக உளவுத்துறை அமைப்புகள் எச்சரித்ததை அடுத்து பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பள்ளத்தாக்கில் உள்ள சில சந்தேக நபர்களின் செயற்பாடுகள் காணப்படுகின்றன என தெரியவந்துள்ளது.

மேலும், பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தொடங்க அறிவுறுத்தப்பட்டுள்ளன.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து பள்ளத்தாக்கில் இருந்த பயங்கரவாதிகளின் குடியிருப்புகள் அழிக்கப்பட்டதற்கு பதிலடியாக, பயங்கரவாதிகள் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளனர் என தொடர்ச்சியான உளவுத்துறை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, பாதுகாப்புப் படையினர், ஜம்மு காஷ்மீர் பொலிஸார் சிறப்பு நடவடிக்கைக் குழுவைச் சேர்ந்த எதிர்ப்புப் படைகளை, குல்மார்க், சோனாமார்க் மற்றும் தால் ஏரிப் பகுதிகள் உள்ளிட்ட முக்கியமான சுற்றுலாத் தலங்களுக்கு அனுப்பியுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக, பாதுகாப்பு நடவடிக்கைகள் கணிசமாக பலப்படுத்தப்பட்டுள்ளன.

# 6 பாகிஸ்தானிய யூடியூப் தளங்களுக்கு தடை விதித்தது இந்தியா மத்திய அரசு

காஷ்மீர் - பஹல்காம் பகுதியில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், பாகிஸ்தானின் 16 யூடியூப் தளங்களுக்கு இந்திய மத்திய அரசு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

பஹல்காம் தாக்குதல் விவகாரத்தில் இந்தியாவுக்கு எதிராக போலியான செய்திகளை வெளியிட்டதற்காக இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய Dawn, Samaa TV, ARY News, Bol News, Raftar, Geo News மற்றும் Suno News உள்ளிட்ட யூடியூப் தளங்க ளுக்கே இவ்வாறு தடை விதிக்கப்




பட்டுள்ளது.

இதில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான சோயிப் அக்தரின் யூடியூப் தளமும் உள்ளடங்குகின்றது.

# அமெரிக்காவில் தமிழக மாணவர்களுடன் பா.ஜ.க. அண்ணாமலை கலந்துரையாடல்

இந்தியா கொள்கை மற்றும் பொருளாதார ஆராய்ச்சி குறித்து அமெரிக்காவின் அரிசோனா மாநில பல்கலைக்கழகத்தில் மாணவர்களுடன் பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை கலந்துரையாடினார்.

தமிழக பாஜகவின் மாநில தலைவராக இருந்த அண்ணாமலை மாற்றப்பட்டு, புதிய மாநில தலைவராக நயினார் நாகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். மாநில தலைவர் மாற்றத்துக்கு பிறகு அண்ணாமலை பல்வேறு பயணங்களை மேற்கொண்டு வருகிறார்.

குறிப்பாக, கடந்த 14 ஆம் திகதி ஆன்மிக பயணமாக அண்ணாமலை இமயமலை சென்றார். இமயமலை



யில் ஸ்ரீ ஸ்ரீ மகாவதார் பாபாஜி குகையில் தியானம் செய்தார். 3 நாள் ஆன்மிக பயணத்துக்கு பிறகு மீண்டும் சென்னை திரும்பினார். பின்னர், கட்சியின் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்ட அவர், கடந்த 23 ஆம் திகதி அமெரிக்கா சென்றார்.

அமெரிக்காவில், கலிபோர்னியா மாகானத்தில் உள்ள புகழ்பெற்ற ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில், 'ஸ்டான்போர்ட் இந்தியா மாநாடு 2025' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் பங்கேற்று கலந்துரையாடினார். அதனை தொடர்ந்து, அமெரிக்காவில் உள்ள டெஸ்லா மோட்டார்ஸ் நிறுவனத்தின் உயர் நிர்வாகிகளுடன் முக்கியமான கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

இந்நிலையில், நேற்று அரிசோனா மாநில பல்கலைக்கழகத்தில், இந்தியா கொள்கை மற்றும் பொருளாதார ஆராய்ச்சி குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடி உள்ளார். இந்த கலந்துரையாடலில் இந்தியாவின் வளர்ச்சி மற்றும் கொள்கை மாற்றங்கள் குறித்த மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு அண்ணாமலை விளக்கமாக பதில் அளித்தார்.



# அமெரிக்காவிடம் வரி தொடர்பாக எந்தவித பேச்சும் நடைபெறவில்லை

## சீனா திட்டவட்டமாக மறுப்பு

அமெரிக்காவிடம் வரிகள் தொடர்பாக எந்தவித பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என சீனா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

அண்மையில் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த ட்ரம்ப், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தன்னை தொலைபேசியில் அழைத்தார் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அமெரிக்காவுடன் எந்த பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை என சீன வர்த்தக அமைச்சகம் மறுத்துள்ளது.

மேலும் வரிகள் தொடர்பாக அமெரிக்காவுடன் எந்த ஆலோசனையோ, பேச்சுவார்த்தையோ நடைபெறவில்லை என்று அமெரிக்காவில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தை நடைபெறுவதாக அமெரிக்கா கூறுவது, தவறாக வழிநடத்தும் செயல் என்றும், வரிப் போரை தொடங்கியது அமெரிக்கா தான், அதை உண்மையிலேயே சரி செய்ய விரும்பினால், முதலில் அவர்கள் தங்கள் தவறுகளை சரி செய்ய வேண்டும்.

அடுத்தவர்களை மிரட்டுவதையும், அவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதையும் நிறுத்திவிட்டு, சீனாவிற்கு விதித்த வரிகள் அனைத்தையும் முழுமையாக நீக்க வேண்டும் என்றும் சீன தூதரகம் வலியுறுத்தியுள்ளது.





# பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை அனுப்பி வைக்கும் துருக்கி

பாகிஸ்தானுக்கு இராணுவ தளபாடங்களை போர் விமானங்கள் வாயிலாக துருக்கி அனுப்பி வைத்த தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தானுக்கு ட்ரோன்கள் உள்ளிட்டவற்றை வழங்கி, இராணுவ ரீதியாக சீனா உதவுகிறது. பாகிஸ்தான் சீனா, துருக்கி ஆகிய மூன்று நாடுகளும் வலுவான பாதுகாப்பு உடன்படிக்கை செய்துள்ளன.

அதன்படி, துருக்கியும் பாகிஸ்தானுக்கு இராணுவ உதவியை வழங்கி வருகிறது. பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள விமானப்படை தளத்துக்கு நேற்று முன்தினம் துருக்கி விமானப் படைக்கு சொந்தமான 'சி -130 ஹெர்குலிஸ்' போர் விமானம் சென்றது. அதில், ஏராளமான போர் கருவிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

இதுபோல, இஸ்லாமாபாத் விமானப்படை தளத்துக்கும், ஆறு 'சி -130 ஹெர்குலிஸ்' ரக போர் விமானங்களை துருக்கி நேற்று அனுப்பி வைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

போர் விமானங்கள் வருகையை இரு நாடுகளும் உறுதி செய்தபோதிலும், அவற்றில் எடுத்துச் செல்லப்பட்ட இராணுவ தளவாடங்கள் பற்றிய விவரங்களை வெளியிடவில்லை.

கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 29/04/2025

**கனடியர்கள் அதிகளவானோர் வீட்டிலிருந்து வேலை செய்கின்றனர்**

கனடியர்கள் அதிக அளவில் வீட்டில் இருந்து வேலை செய்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில், உலகம் முழுவதும் நடத்தப்பட்ட 02






## பொதுத் பொதுத்தேர்தல் 2025:

# ஆளும் லிபரல் கட்சி மீண்டும் ஆட்சியை கைப்பற்றும் சாத்தியம்

**கனடாவில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஆளும் லிபரல் கட்சி மீண்டும் ஆட்சியை கைப்பற்றும் சாத்தியங்கள் காணப் படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.**

**எவ்வாறெனினும் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியை நிறுவக்கூடிய சாத்தியம் கிடையாது என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.**

**இதன்படி லிபரல் கட்சி தொடர்ச்சியாக நான்காவது தடவையாகவும் ஆட்சியை கைப்பற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது.**

முன்னாள் கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையில் கடந்த இரண்டு தடவைகள் பொது தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி ஈட்டி இருந்தது.

கனடாவில் பெரும்பான்மை பலத்தை நிரூபிப்பதற்கு 172 ஆசனங்களை கட்சி ஒன்று பெற்றிருக்க வேண்டும் என்ற இலக்கினை எட்ட முடியுமா என்பது சந்தேகம் என தெரிவிக்கப்படுகிறது.




தற்பொழுது வெளியாகி உள்ள தேர்தல் முடிவுகளின் பிரகாரம் லிபரல் கட்சி முன்னிலை வகிக்கின்றது.

இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் லிபரல் கட்சி 162 தொகுதிகளிலும் கான்சர்வேட்டிவ் கட்சி 149 தொகுதிகளிலும், புளொக் கியூபிகோ கட்சி 23 தொகுதிகளிலும் என்.டி.பி. கட்சி 8 தொகுதிகளிலும் பசுமை கட்சி ஒரு தொகுதியிலும் முன்னிலை வகித்து வருகின்றன.

மொத்தமாக 343 தொகுதிகளில் வேட்பாளர்கள் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

லிபரல் கட்சி சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கனடாவின் வின்சரில் உள்ள வாக்கெடுப்பு மையத்தில் தீ

கனடாவில் நேற்று பொதுத் தேர்தல் நடைபெற்ற நிலையில், வின்சரில் உள்ள WFCU மையத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயை அணைக்க தீயணைப்பு படையினர் போராடிக் கொண்டிருக்கும் போது, அவ்விடத்தில் நடைபெற்று வந்த பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பு மையம் மாற்றப்பட்டது.

மக்ஹறக் தெருவில் அமைந்துள்ள WFCU மையத்தின் கூரையில் தீ பரவியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் டார்ஃபீல்டில் இருந்து புளோரன்ஸ் வரை மக்ஹறக் தெருவை மூடினர், பொதுமக்களை அந்த பகுதியில் இருந்து விலகியிருக்கும்படி கேட்டுக்கொண்டனர்.

தீயணைப்பு அதிகாரிகள், மையத்தில் இருந்த அனைவரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.



பொலிஸார் சமூக ஊடகங்களில் இந்த தகவலை பகிர்ந்து, வாக்காளர்களை புதிய இடத்திற்கு வழி நடத்தி உள்ளனர்.




# கனடாவில் தமிழர்கள் உட்பட பலரின் வீசாக்கள் நிராகரிப்பு

## பலரை நாடு கடத்த நடவடிக்கை

கனடாவுக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு தொழிலாளர்கள், சர்வ தேச மாணவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை முன்னெப்போதும் இல்லாத அளவில் நாட்டிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மில்லியன் கணக்கான தற்காலிக வீசா விண்ணப்பங்களை கனடா நிராகரித்துள்ளது. மொத்தமாக 2.35 மில்லியன் தற்காலிக விசாக்கள் நிராகரிக்கப்பட்டன என தெரிவிக்கப்படுகின்றது.

இது முந்தைய ஆண்டை விட 1.8 மில்லியன் நிராகரிப்புகள் அல்லது 35 சதவீத அதிகரிப்பைக் குறிக்கிறது.

விசிட்டர் விசாக்கள் மிகக் கடுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 54 சதவீத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச ரீதியில் கொவிட் தொற்று பரவலின் பின்னர் அதிகரித்து வரும் தற்காலிக குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையால் வீடுகள், சுகாதாரம் மற்றும் பொதுச் சேவைகள் மீதான அழுத்தம் அதிகரித்துள்ளது.

இந்த அழுத்தத்தை குறைப்பதற்காகவே வீசாக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு காரணமாக கூறப்படுகின்றது.

நிராகரிக்கப்பட்ட 2.35 மில்லியன் விசாக்களில் 1.95 மில்லியன் விசாக்கள் பயண விசாக்கள் ஆகும். அத்துடன், ஆய்வு அனுமதி மற்றும் பணி அனுமதி விசாக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

கனடாவிற்கு புலம்பெயர முயற்சிப்பவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த கனடா தனது குடிவரவு விதிகளை கடுமையாக்கி வருகிறது.

வளங்களை சிறப்பாக நிர்வகிப்பதற்காகவும் அவற்றை பாதுகாப்பதற்காகவும் கனேடிய அரசாங்கம் இந்த மாற்றங்களை செய்து வருகிறது.

இந்த மாற்றங்கள் வீட்டுவசதி மற்றும் சுகாதாரத்தின் மீதான அழுத்தத்தை குறைக்கும் அதேவேளையில், பல்வேறு தொழில்களில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

## கனடியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு ஆய்வின் முடிவுகள் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

உலகின் ஏனைய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களை விட கனடியர்கள், அதிகமாக வீட்டிலிருந்து வேலை செய்கின்றனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்டான்போர்ட் பொருளாதாரக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட இந்த ஆய்வு முடிவுகளின்படி, கனடியர்கள் வாரத்திற்கு சராசரியாக 1.9 நாள்கள் வீட்டிலிருந்து வேலை செய்கிறார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

ஆய்வில் 40 நாடுகளில் இருந்து 16,000 பேர் பங்கேற்றனர், ஆனால் இதில் கல்லூரி அல்லது பல்கலைக்கழக பட்டதாரிகள் மட்டுமே சேர்க்கப்பட்டனர்.

இதனால், அனைத்து வேலைக்கு வரும் மக்களின் நிலையை இதனுடன் ஒப்பிட முடியாது என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பட்டதாரிகள் வீட்டிலிருந்து வேலை செய்வதற்கான



வாய்ப்பு அதிகம் உள்ளவர்கள் என்பதாலே இவ்வாறு தெரிவுசெய்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உலகளாவிய தரவரிசையில், கனடாவுக்கு பின்னர் இரண்டாவது இடத்தில் இங்கிலாந்து உள்ளதுடன், அதற்கு அடுத்தபடியாக ஃபின்லாந்து, அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் சீனா ஆகியன இடம்பெற்றுள்ளன.



# கனடா அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாகும்

## ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தல்

கனடா, அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

கனடாவின் நடைபெறும் தேர்தல் தொடர்பாக அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

தனது பழைய கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. கனடா எங்களுடன் இயற்கையாக இணைவது சிறந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

"கனடா மக்களுக்கு வாழ்த்துகள். உங்கள் வரிகளை பாதியாக குறைக்கும், உங்கள் இராணுவ சக்தியை உலகில் உயர்ந்த நிலைக்கு இலவசமாக உயர்த்தும், உங்கள் கார்கள், உருக்கு, அலுமினியம், மரப்பொருள்கள், எரிசக்தி மற்றும் பிற தொழில்கள் நான்கு மடங்காக வளரும் வாய்ப்பை தரும் நபரை தேர்ந்தெடுங்கள் என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எல்லா வரி, தடையில்லாமல் வர்த்தகம் நடைபெறும்; இது உங்கள் மக்களுக்கு பெரும் பயன் தரும்," என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், அமெரிக்கா, கனடாவுக்கு ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான பில்லியன் டொலர் வர்த்தகம் வழங்குவதை தொடர முடியாது.

இது மாநிலமாக இருந்தால் மட்டுமே நியாயமானது என்று டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

புதிய கனடிய நிர்வாகத்துடன் அமெரிக்கா இணைந்து பணிபுரியும் என அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் மார்கோ ரூபியோ குறிப்பிட்டுள்ளார்.ஒரு மாநிலமாக இருப்பது சிறப் பாக வேலை செய்யும் என்று ட்ரம்ப் கூறினார்.

இதற்கு முன்பு அவர், பொருளாதார அழுத்தத்தின் மூலம் கனடாவை 51 ஆவது மாநிலமாக்குவேன் என்று மிரட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

னடாவிடமிருந்து எமக்கு எதுவும் தேவையில்லை, கார்கள் மற்றும் எண்ணெய் உட்பட, எதுவும் தேவையில்லை என ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

நாம் எங்கள் சொந்த கார்கள் தயாரிக்க விரும்புகிறோம். வெளிநாட்டு கார்களை தேவையின்றி வாங்க விரும்பவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் கனடிய பிரதமர் மார்க் கார்னியுடன் நடந்த தொலைபேசி உரையாடலுக்குப் பிறகு, ட்ரம்ப் கனடாவை 51 ஆவது மாநிலமாக்கும் பேச்சை சிறிது குறைத்திருந்தார்.

மேலும், கனடிய பொருள்கள் மீது தனித்தனி 25 வீத வரிகளும் விதிக்கப்பட்டுள்ளன, இது பெரும்பாலும் போதைப் பொருள் கடத்தலை கட்டுப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக அமெரிக்கா கூறுகின்றது.